(2020) 2 எஸ்சிஆர் 597

பாரத் குக்கிஞ் கோல் லிமிடெட் மற்றும் பிறர்

எதிர்

ஷ்யாம் கிஷோர் சிங்

(உரிமையியல் மேல்முறையீடு எண் 1009/2020)

2020 பிப்ரவரி திங்கள் 5 ஆம் நாள்

(மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். பானுமதி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ். போபண்ணா)

பணி விதிகள் – மேல்முறையீட்டாளர் கம்பெனியில் பயிற்சி பெறுபவராக எதிர்மனுதாரர் நியமிக்கப்பட்டுள்ளார் – அலுவலகப் பதிவின்படி அவரது பிறந்த நாள் 04.03.1950 – இருப்பினும் அவரது மெட்ரிகுலேஷன் சான்றிதழில் உள்ள பதிவுகள் வரையறைகளின்படி, அவரது பிறந்த நாள் 20.01.1955 என விளம்பி அவர் கோரியுள்ளார் – 2009–இல் அவரது ஓய்வுக்கு சற்று முன்னர் பதிவுகளில் மாறுதல் செய்ய கோரியிருந்தார் – மேல்முறையீட்டாளர்களால் மறுக்கப்பட்டுள்ளது – எதிர்மனுதாரர் 31.3.2010 இல் ஓய்வு பெற்றுவிட்டார் மற்றும் ஓய்வு பெற்றதிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் உயர் நீதிமன்றத்தில் நீ.பே. மனு தாக்கல் செய்துள்ளார் – உரிய தருத்தங்கள் மேற்கொள்ளவும் மற்றும் தொடர் ஆணைகள் பிறப்பிக்கவும் மேல்முறையீட்டாளர்களுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது – இருநபர் அமர்வு எதிர்மனுதாரர்

பெறவேண்டிய பயனை கட்டுப்படுத்தியுள்ளது – முடிவு ஒரு பிறந்த தேதி பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அது முழுப்பணிக் காலத்திலும் அது ஏற்றக்கொள்ளப்பட்ட பின்னர் பணியின் இறுதி நாள்களில் மாற்றம் கோரப்படுவது ஏற்கப்படக்கூடாது – தற்போதைய வழக்கில் 1982 இல் பணியில் சேர்ந்த நாளிலும் மற்றும் நியமனதாரர் படிவம் பூர்த்தி செய்ய மற்றும் குறையை நீக்க எதிர்மனுதாரருக்கு வாய்ப்பு வந்த 1987 லும் கூட, அவர் பிறந்த நாள் 04.03.1950 என்றே குறிப்பிட்டுள்ளார் – 1998 இல் சேம நல நிதி நியமனதாரர் படிவம் பூர்த்தி செய்தபோது, பணி தொடங்கிய நாளில் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பிறந்த நாளையே, அவர் அதனை வலியுறுத்தியுள்ளார் – எனவே, பீஹார் பள்ளித் தேர்வு வாரியத்திலிருந்து சரிபார்த்த காரணத்தினால் மட்டுமே பிறந்த நாள் 20.11. 1955 என உறுதி செய்யப்பட்டாலுங்கூட, அந்த நிலையில் அத்தகைய மாற்றத்தை அனுமதிக்க இயலாது – அவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து 30 ஆண்டுக்களுக்கு மேல் ஆனபின்னரே முதலில் 2009 இல் அவர் மனுச்செய்துள்ளார் – ஓய்வு பெறுவதற்குமுன், உடனடியாக நீதிமன்ற நிவாரணம்கூட எதிர்மேல்முறையீட்டாளர் பயன்படுத்திக்கொள்ளவில்லை – உயர் நீதிமன்றத்தால் எதிர்மனுதாரருக்கு காட்டப்பட்ட சலுகை நியாயமானதாக இல்லை – குற்றமுரு உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது.

மேல்முறையீட்டை அனுமதித்து, நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1.1. ஒரு குறிப்பிட்ட பிறந்த தேதி பணிப் பதிவேட்டில் பதிவு செய்த பின்னர், அது பணிக்காலம் முழுதும் சரி என ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், பணிக்கால முடிவில் மாறுதல் கோரப்பட்டது ஏற்கப்படக்கூடாது என்பது நன்கு அமைந்த நிலையாகும். தற்போதைய வழக்கில் அவர் பணியில் சேர்ந்த நாளிலும் பன்னர் 1987 லும்கூட நியமனப் படிவத்தைப் பூர்த்தி செய்ய எதிர்மேல்முறையீட்டாளர் வாய்ப்பு பெற்றிருந்தும், அவரது பிறந்த நாளை 4.3.1950 என்றே காட்டியுள்ளார் மற்றும் 1998 இல் சேம நல நிதி நியமனப் படிவம் பூர்த்தி செய்யப்பட்ட பொதும், அதனையே அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். அவர் பணியில் சேர்ந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகுதான், முதன் முதலில் 2009 இல் அவர் மனு அளித்துள்ளார். மேலும் ஓய்வுக்கு முன்பாகவே, உடனடியாக நீதிமன்ற நிவாரணம் பெறவில்லை. மாறாக, எதிர்மேல்முறையீட்டாளர் 31.3.2010 இல் ஓய்வு பெற்றுவிட்டார் மற்றும் அதன் பின்னரும்கூட, 2014 இல் தான் ஓய்வுக்குப்பின் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மட்டுமே நீ.பே. மனு தாக்கல் செய்துள்ளார். இந்த சூழ்நிலைகளில், உயர் நீதிமன்றத்தால் எதிர்மேல்முறையீட்டாளருக்கு காட்டப்பட்ட சலுகை நியாயப்படுத்தப்படவில்லை. எனவே, நீ.பே.ம (வழக்கு) எண் 6172/2014 இல் 13.10.2017 தேதியன்று தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் அமர்வில் எல்பிஏ எண் 115/2018 இல் 19.2.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் நிலைநிறுத்தத்தக்கதல்ல. எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. (பத்திகள் 7, 12–14)

கம்தா பாண்டே –எதிர்– தி/ள் பிசிசிஐ மற்றும் பலர் [2007] 3 ஜேஎல்ஜேஆர் 726; மஹாராஷ்டிரா மாநிலம் மற்றும் ஒருவர் –எதிர்– கோரக்நாத் சீதாராம் கம்ப்ளே & பலர் (2010) 14 எஸ்சிசி 423 : [2010] 14 எஸ்சிஆர். 752; ம.பி. மாநில அரசு –எதிர்– பிரேம்லால் ஸ்ரீவாஸ், (2011) 9 எஸ்சிசி 664 : [2011] 11 எஸ்சிஆர் 444; தொழிற்சாலை மேலாளர் கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட் –எதிர்– லக்ஷ்மன் (2020) 3 SCC 419; தி/ள் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் & பலர் –எதிர்– ராம் சாமுக் யாதவ் & பலர் (2020) 3 எஸ்சிசி 421 – குறித்துக்காட்டப்பட்டது.

பாரத் கோக்கிங் கோல் லிமிடெட் & பலர் –எதிர்– சோட்டா பிராசா உரான்வ் (2014) 12 எஸ்சிசி 570 : [2014] 4 எஸ்சிஆர் 887 – வலியுறுத்தப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

(2007) 3 ஜேஎல்ஜேஆர். 726	குறித்துக்காட்டப்பட்டது ...பத்தி 4
(2010)14 எஸ்சிஆர் 752	குறித்துக்காட்டப்பட்டது. ... பத்தி 8
(2011) 11 எஸ்சிஆர் 444	குறித்துக்காட்டப்பட்டது. .. பத்தி 9

(2020) 3 எஸ்சிசி 419 குறித்துக்காட்டப்பட்டது

... பத்தி 10

(2020) 3 எஸ்சிசி 421 குறித்துக்காட்டப்பட்டது.

.. பத்தி 10

(2014)4 எஸ்சிஆர் 887 வலியுறுத்தப்பட்டது

... பத்தி 11

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண் 1009/2020.

ராஞ்சியிலுள்ள ஜார்கண்ட் உயர் நீதிமன்றத்தில் எல்பிஏ. எண் 115/2018 இல் 19/02/2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

வழக்குரைஞர்கள் :

கே.எம். நட்ராஜ்,

ஏஎஸ்ஜி, பாரிஜாத் கிஷோர்,

நிச்சல் குப்தா, வத்சப் ஜோஷி

... மேல்முறையீட்டாளர்களுக்காக

எம். ஷோப் ஆலம்,

செல்வி. ஃபௌசியா ஷகில்,

சந்தோஷ் குமார்,

மொஜாஹத் கரீம் கான் ... எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ். போபண்ணா அவர்களால் பகரப்பட்டது:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. ராஞ்சியிலுள்ள ஜார்கண்ட் மாநில உயர் நீதிமன்ற அமர்வில் எல்பிஏ எண் 115/2018 இல் 19.02.2019 தேதியன்று வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். வழங்கப்பட்ட நிவாரணத்தின் அளவை பொருத்தவரை 13.10.2017 தேதிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை, அமர்வு மேற்படி உத்தரவு மூலம் மாற்றியிருந்தபோதிலும், பணிப்பதிவுகளில் பிறந்த நாளை மாற்றுவது குறித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2011 வரை ஓராண்டு கால ஊதியத்திற்கு சமமான தொகையை மேல்முறையீட்டாளர்கள் தரவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதே எதிர்மேல்முறையீட்டாளரின் வாதமாகும். இதனால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் இந்த மேல்முறையீட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

3. சங்கதிகளின் சுருக்கம் யாதெனில், இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளர்–கம்பெனியில் பயிற்சி பெறுபவராக நியமிக்கப்பட்டார். அவருக்கு தனி எண் 00473470 வழங்கப்பட்டு, அவர் 27.2.1982 முதல் டோஸர் இயக்கும் பயிற்சி பெறுபவராகப் பணியில் சேர்ந்துள்ளார். அவரது மெட்ரிகுலேஷன் சான்றில் உள்ள பதிவு வரையறைகளின்படி அவரது பிறந்த நாள் 20.1.1955 ஆக விளம்பப்பட்டது என எதிர்மேல்முறையீட்டாளர் கோரியிருந்தாலும்கூட, பணிப் பதிவேடுகளில் பதிவான பிறந்த நாள் 04.03.1950 என்பதும் மற்றும் அவரது நியமன நாளான

27.2.1982 முதல் அவர் ஓய்வு பெற்ற 31.3.2010 தேதி வரை அது அப்படியே இருந்தது என்பதும் உண்மையாக இருந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு எதிர்மேல்முறையீட்டாளர் சேம நலநிதி நியமனம் சமர்ப்பித்து அதில் குடும்பவிபரங்களைத் தந்தும் மற்றும் மனைவியை அவரது நியமனதாரராகவும் காட்டியும் உள்ளார். சம்பந்தப்பட்ட படிவத்தில்கூட அவரது பிறந்த நாள் 04.03.1950 எனக் காட்டியுள்ளார். அவரது ஓய்வு பெறும் வயதுவரை எதிர்மனுதாரர் அவ்வாறாக பணியில் தொடர்ந்து, 31.03.2010 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் ஓய்வு பெறுவதற்கு முன்புதான், 2009 ஆம் ஆண்டில், பதிவுகளில் செய்யப்பட்டுள்ள பிறந்த நாளை மாற்றக் கோரி, எதிர்மேல்முறையீட்டாளரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அது மேல்முறையீட்டாளர்களால் மறுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் அந்த விஷயம் குறித்து எதிர்மேல்முறையீட்டாளர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை மற்றும் 31.03.2010 இல் ஓய்வு பெற்றுவிட்டு நான்கு ஆண்டுகள் கழித்து, ராஞ்சியில் உள்ள ஜார்கண்ட் உயர் நீதிமன்றத்தின் முன்பு நீ.பே (எஸ்) மனு எண் 6172/2014 ஐ தாக்கல் செய்தார். இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் முன்னிலையாகி அவர்களது எதிர்ப்புரை தாக்கல் செய்தனர். முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் தன்மையை கருத்திற்கொண்டு கற்றறிந்த தனி நீதியரசர், 2009 இல் பிறந்த தேதி திருத்துவது தொடர்பாக எதிர்மேல்முறையீட்டாளர் பிரச்சினையை எழுப்பியபோது,

பாட்னா, பிஹார் பள்ளித் தேர்வு குழுவிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளரால் கோரப்பட்ட பிறந்த தேதியை மேல்முறையீட்டாளர்கள் சரிபார்த்துள்ளனர். அதை சரிபார்த்தபோது பள்ளி பதிவுகளில் அவரது பிறந்த நாள் 20.1.1995 என உறுதி செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்ட சரிபார்த்தல் அவர்களுக்கு எதிராக கற்றறிந்த தனி நீதியரசரால் முடிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் பணிப் பதிவுகளில் எதிர்மேல்முறையீட்டாளரால் பதிவு செய்யப்பட்ட நாளான 04.03.1950 சரியானதாக இருக்கும் என்றால், அதனை பீகார் பள்ளி தேர்வுக்குழுவிடம் சரிபார்க்க மேல்முறையீட்டாளர்களுக்கு வாய்ப்பே இல்லை எனக் கருதப்பட்டது. இந்த சூழ்நிலைகளில் பணியில் சேர்வதற்கு முன்பாகவே மொட்ரிகுலேஷன் சான்றிதழில் பிறந்த நாள் 20.01.1955 எனப் பதிவு செய்யப்பட்டிருப்பதால் எதிர்மேல்முறையீட்டாளரால் வைக்கப்பட்ட வாதத்தை கருத்திற்கொண்ட கற்றறிந்த தனி நீதியரசர், அதன் அடிப்படையில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு தொடர் உத்தரவுகளை பிறப்பிக்க மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிடும் முடிவுக்கு வந்தார்.

4. பீகார் பள்ளித் தேர்வுக் குழுவிடம் மெட்ரிகுலேஷன் சான்றிதழின் சரியான தன்மை தொடர்பாக பரிசோதித்தல் குறித்து கற்றறிந்த தனி நீதியரசரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்சொன்ன காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளில்

ஜார்கண்ட் மாநில உயர் நீதிமன்ற முழு அவர்வின், வழக்கான கம்டா பாண்டே –எதிர்– திருவாளர்கள் பிசிசிஐ மற்றும் பலர் ((2007)13 ஜேஎல்ஜேஆர் 726)இல் வெளியான தீர்ப்பினை கற்றறிந்த தனி நீதியரசர் சார்ந்துள்ளதாலும், அமர்வு அவற்றை குறிப்பிட்டு, கற்றறிந்த தனி நீதிபதியால் அளிக்கப்பட்ட காரணங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. இருப்பினும், இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர் அவரது பணி முன்நிலை கொணர அவரது ஓய்வூக்குப்பின் நான்கு ஆண்டுகள் கழித்து நீ.பே. மனு தாக்கல் செய்துள்ளார் என்பதனை அமர்வு கருத்திற்கொண்டுள்ளது. அவரது பணிக்காலத்தின்போது பல படிவங்களை எதிர்மேல்முறையீட்டாளர் பூர்த்தி செய்து அதில் அவரது கல்வித் தகுதி குறித்து எதிர்மேல்முறையீட்டாளர் தெரிவிக்கவில்லை என்பது மேலும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த கருத்தினால், நீதிமன்றத்தை அணுகுவதில் ஏற்பட்ட காலதாமதம் தொடர்பாக கற்றறிந்த தனி நீதிபதி சரியாக செயல்படவில்லை என்ற கருத்தினை அமர்வு கொண்டுள்ளது. இந்த சூழ்நிலைகளில், அந்த சமயத்தில் இருந்து, ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2011 வரை எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஓராண்டு காலத்துக்கான வழங்கப்படும் ஊதியத்தின் பயனை அமர்வு நிர்ணயித்தது. இந்தப் பின்புலத்தில், தனி நீதியரசர் மற்றம் அமர்வு நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட இரு உத்தரவுகளினால் பாதிப்படைந்து மேல்முறையீட்டாளர்கள் இந்த நீதிமன்றத்தின் முன்பு மனு தாக்கல் செய்தனர்.

5. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த கூடுதல் தலைமைச் சட்ட முகவர் திரு. கே.எம். நட்ராஜ் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எம். சோயப் ஆலம் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம் மற்றும் மேல்முறையீடு தாள்களை பார்வையிட்டோம்.

6. எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளர்களின் பணியில் 1.3.1982 இல் சேர்ந்தார் என்ற விஷயம் ஏற்றுக்கொண்ட நிலையாகும். மெட்ரிகுலேஷன் சான்றிதழில் காட்டப்பட்ட பிறந்த நாள் 20.1.1955 என எதிர்மேல்முறையீட்டாளர் சார்ந்திருந்தாலும், பணியில் சேர்ந்த நேரத்தில் நியமணம் செய்தோர் முன்பாக மேற்சொன்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்பதைப் பதிவாகக் காட்டும் எந்த பொருண்மையும் இல்லை. இந்தப் பின்புலத்தில், அந்த ஆவணத்தில் பிறந்த நாள் 04.03.1950 ஆக காட்டப்பட்டு, அது எதிர்மேல்முறையீட்டாளரால் தரப்பட்ட சம்பந்தப்பட்ட படிவங்களில் அவரது கையெழுத்தின் கீழ் அந்த நாள் உள்ளது என்பது மேல்முறையீட்டாளர்களால் பராமரிக்கப்படும் பணிப் பதிவேடுகள் காட்டுகிறது. படிவம் "பி"இல் காட்டப்பட்ட பிறந்த நாளின் சில திருத்தத்தை உயர் நீதிமன்றம் கவனித்துள்ளது என எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டாலும், மேற்சொன்ன ஆவணத்தின் தொடர்பு, பணிப் பதிவுகளிலுள்ள பிற ஆவணங்களை காட்டாமல் பரிசீலிக்கமுடியாது. பிறந்த நாள் தொடர்பாக பதிவுகளில்

மாற்றம் செய்யக்கோரி 2007 ஆண்டில் அவரது மனு வழியாக எதிர்மேல்முறையீட்டாளர் கோருகிற விஷயமே, 27.2.1982 இலிருந்தே உள்ள நிலைமையான பணிப் பதிவுகளில் 4.3.1950 என்றே உள்ளதைக் காட்டுகிறது.

7. இதன் பின்புலத்தில், உயர் நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கருத்து நியாயமானதா எனக் கவனிக்கப்படவேண்டும். 2009 ம் ஆண்டு எதிர்மேல்முறையீட்டாளர் மனுச் செய்ததையும், பீஹார் பள்ளித் தேர்வுக் குழுவிடம் மேல்முறையீட்டாளர்கள் சரி பார்த்ததையும் கற்றறிந்த தனி நீதியரசர் கருத்தில்கொண்டதை, கற்றறிந்த தனி நீதியரசரின் உத்தரவில் பத்தியில் காட்டியுள்ளதை எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் குறிப்பாகச் சொல்கிறார். பணிநியமன நாளிலிருந்து மூன்று தலைமுறைகள் கடந்த பின்னர் அத்தகைய குறிப்பு செய்திருந்தபோதும் எங்கள் கருத்தில் தற்போதுள்ள விஷயங்களில் அது பொருத்தமாக இராது. ஒரு குறிப்பிட்ட பிறந்த தேதி பணிப் பதிவேட்டில் பதிவு செய்த பின்னர், அது பணிக்காலம் முழுதும் சரி என ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், பணிக்கால முடிவில் மாறுதல் கோரப்பட்டது ஏற்கப்படக்கூடாது என்பது நன்கு அமைந்த நிலையாகும். தற்போதைய விஷயங்களின் அமைப்பானது, எதிர்மேல்முறையீட்டாளர் பணியில் 1.3.1982 இல் சேர்ந்துள்ளார் என்பது அந்த தேதியிலிருந்து பதிவில் பிறந்த தேதி 04.03.1950 என்றே உள்ளது. குடும்பம் குறித்த விபரங்கள் மற்றும் நியமனதாரர்

ஆகியோரைக் காட்டும் நியமனதாரர் படிவமும் சமர்ப்பிக்கும் தேவை பூர்த்தி செய்யப்பட்டு, அது 25.5.1998 அன்று எதிர்மேல்முறையீட்டாளரால் தரப்பட்டுள்ளது. அந்த நியமனதாரர் படிவத்தில், பணியாளரின் பிறந்த தேதி குறிப்பிடப்படவேண்டிய தேவை உள்ளது, அதில் அவரது கையெழுத்திலேயே எதிர்மேல்முறையீட்டாளர் பிறந்த தேதி 4.3.1950 எனக் காட்டியுள்ளார். அந்த விஷயம் தவிர, பணிப் பதிவேடு பராமரிக்கும் முறையில் மாறுதல் ஏற்பட்டமையால், 1987 ஆம் ஆண்டு பணிப் பதிவுகளில் சரிபார்க்க மற்றும் மாறுதல் கோர எல்லா பணியாளர்களுக்கு ஒரு வாய்ப்பு தரப்பட்டது என்பதை, கற்றறிந்த கூடுதல் தலைமைச் சட்ட முகவர் சுட்டிக்காட்டுகிறார். அந்த நிலையிலும்கூட, எதிர்மேல்முறையீட்டாளர் எந்த மாறுதலும் கோரவில்லை. எனவே, இந்த சூழ்நிலையில், முதலில் 1987 இல் வாய்ப்புகிடைத்தபோது பயன்படுத்தப்படவில்லை மற்றும் அதன் பின்னர் 25.5.1998, எதிர்மேல்முறையீட்டாளரே சேம நலநிதி நியமன படிவத்தில், பிறந்த தேதி 4.3.1950 என்றே காட்டியுள்ளார். அது பணி துவங்கிய நாளில் பணிப் பதிவேட்டில் பதிவு செய்த பிறந்த நாளை ஒத்தேயுள்ளது, பிஹார் பள்ளித் தேர்வு குழுவிலிருந்து சரிபார்த்த காரணத்தினால் மட்டுமே மற்றும் 20.1.1955 பிறந்த தேதி என்று உறுதி செய்யப்பட்டாலும்கூட, அத்தகைய மாறுதல் அந்த நிலையில் ஏற்கத்தக்கதல்ல.

8. தனது பணிக்கால இறுதியில், பணிப் பதிவுகளில் பிறந்த தேதி மாறுதல் கோருவது நிலைநிறுத்தத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தொடர்ந்து முடிவு செய்தது. இந்த விஷயத்தில் மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் ஒருவர் –எதிர்– கோரக்நாத் சீதாராம் மற்றும் பிறர் (2010)14 எஸ்சிசி 423 வழக்கை, கற்றறிந்த கூடுதல் தலைமைச் சட்ட முகவர் சார்ந்துள்ளார். அதில், இந்த நீதிமன்றத்தின் முந்தைய தொடர் முடிவுகள் குறித்துக் கொள்ளப்பட்டு, கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது:

> "16. உ.பி. மத்யாமிக் சிக்ஷா பரிஷத் –எதிர்– ராஜ் குமார் அக்னிஹோத்ரி {(2005) 11 எஸ்சிசி 46 2006 எஸ்சிசி (எல் &எஸ்) 96} வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பினை, மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்துள்ளார். இந்த வழக்கில், இந்த நீதிமன்றத்தின் பல்வேறு எண்ணிக்கையிலான தீர்ப்புகளை பரிசீலித்து, பணிப் பதிவுகளில், பிறந்த தேதி குறித்து குறைகள், பணி நிலையின் இறுதிக்கட்டத்தில் அனுமதிக்கப்படக்கூடாது என கருத்து தெரிவித்துள்ளது.
>
> 17. மற்றுமொறு தீர்ப்பான, உத்தராஞ்சல் மாநிலம் எதிர் பீதாம்பர் தத் செம்வால் {(2005) 11 எஸ்சிசி 477 : 2006 எஸ்சிசி (எல் & எஸ்) 106} வழக்கில், கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் பணிக்குப் பின்னர் பணிப் பதிவுகளில் திருத்தம் கோரப்பட்டுள்ளது என அரசுப் பணியாளருக்கு நிவாரணம் மறுக்கப்பட்டுள்ளது உயர் நீதிமன்றத்தின்

உத்தரவை நீக்கறவு செய்யும்போது மூன்று தலைமுறைகளுக்குப் பின்னர், அந்த முடிவில் உயர் நீதிமன்றம் தலையிட்டிருக்கக் கூடாது என இந்த நீதிமன்றம் கருதியுள்ளது.

19. இறுதிக்கட்டத்தில் திருத்தம் பெருமளவு பணியாளர்களின் விளைவாய் இருக்கும், எனவே, இறுதிக் கட்டத்தில் திருத்தம் ஊக்குவிக்கப்படக்கூடாது என இந்த நீதிமன்றம் கூறியுள்ளது. இந்த முடிவுகளில் பல்வேறு பரிமானங்களுக்கு இட்டுச் செல்கிறது. உள்துறை –எதிர்– ஆர் கிருபாகரன் [1994 சப்லி (1) எஸ்சிசி 155 : 1994 எஸ்சிசி (எல் & எஸ்) 449 :(1994) 26 ஏடிசி 828] வழக்கி தீர்ப்பில் சம்பந்தப்பட்ட பகுதி கீழே குறிப்பிடப்படுகிறது (எஸ்சிசி பக்கம் 158–59, பத்தி 7)

" 7. பிறந்த நாள் திருத்தத்திற்கான மனு (அவரது பணி இறுதிக் காலத்தில் பொதுப் பணியாளரின் ஏற்கப்படக்கூடாது) சம்பந்தப்பட்ட பொதுப் பணியாளரின் பிறந்த தேதி திருத்தத்திற்கு அத்தகைய எந்த உத்தரவு இருந்தாலும், அது ஏற்படுத்தி அவருக்குக் கீழே அவர்களுக்கு உரிய, ஆண்டுகளாக காத்திருக்கும் பிறரது பதவி உயர்வு இந்த நடைமுறையில் பாதிக்கப்படக்கூடிய தொடர் விளைவுகள் உடையது என்பது இங்கு குறிப்பிடவேண்டியதில்லை. பிறந்த தேதி திருத்தம் காரணமாக, சம்பந்தப்பட்ட அதிகாரி அலுவலகத்தில் தொடர்வார், சில நேர்வுகளில் ஆண்டுக்

கணக்கிலும், அந்த காலத்தில் முதுநிலையில் அவருக்குக் கீழே உள்ள பல அதிகாரிகள் அவர்களது பதவி உயர்வுக்காகக் காத்திருப்பவர்கள் அவர்கள் பதவி உயர்வு எப்போதும் கிடைக்காமல் போய்விடும் என சிலர் ஈடு செய்யப்படமுடியாத இழப்பினை அடைய நேரிடும்.... எங்களது கருத்துப்படி, அவரது பிறந்த தேதி திருத்தத்தைப் பொறுத்து பொதுப் பணியாளரின் குறைகளை ஆய்வு செய்யும் போது இந்த முக்கிய விஷயம் நீதிமன்றம் அல்லது ஆயத்தால் கவனியாது விடப்படக்கூடாது. அவ்வாறாக, முடிவான தன்மையாக இருக்கும் பொருண்மைகளின் அடிப்படையில் எதிர்மனுதாரால் செய்யப்பட்டு தெளிவான நேர்வாக இருந்தாலன்றி, உண்மை போல தோற்றமளிக்கிறவாறு எழும் அத்தகைய கோரிக்கையின் அடிப்படையில் நீதிமன்றம் அல்லது ஆயம் உத்தரவு வழங்கக்கூடாது. அத்தகைய உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படும்முன், சம்பந்தப்பட்ட நபருக்கு உண்மையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின்படி எந்த வித அல்லது உத்தரவின்படி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பிறந்த தேதி குறித்த திருத்தம் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதில் நீதிமன்றம் அல்லது ஆயம் முழுதும் திருப்தியடையவேண்டும்.... அவரது பணிப்பதிவேட்டில் அவரது பிறந்த தேதி தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்து

என்பதை நிரூபிக்கவேண்டிய கடமை மனுதாரருக்கு உள்ளது."

9. பதிவு செய்யப்பட்ட பிறந்த தேதி பிழையானது என நிறுவ நல்ல சாட்சியமும் இருந்தாலும்கூட, திருத்தம் உரிமையாகக் கோரப்படமுடியாது என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. இவ்விடயமாக மத்தியப் பிரதேச மாநில அரசு –எதிர்– பிரேம் லால் ஸ்ரீ வாஸ், (2011)9 எஸ்சிசி 664 வழக்கில் கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது

"8. அரசுப் பணியாளரின் பிறந்த தேதி திருத்தம் உள்ளிட்ட விஷயங்களில் குறிப்பாக அவரது ஓய்வின்போது அல்லது அவரது பணிக்கால இறுதியில் இருந்தால், நீதிமன்றம் அல்லது ஆயம், அரசுப் பணியில் நுழையும்போது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பிறந்த தேதி திருத்தத்திற்கு உத்தரவு பிறப்பிக்கும்போது மிகவும் விழிப்பாக, எச்சரிக்கையாக மற்றும் கவனமுடன் இருத்தல்வேண்டும் என்று வலியுறுத்தப்படுவது அவசியமாகிறது. அவரது பிறந்த தேதி தொடர்பாக மறுக்கமுடியாத சான்றின் அடிப்படையிலும், அத்தகைய கோரிக்கை நிர்ணிக்கப்பட்டிருந்தவாறு அல்லது சம்பந்தப்பட்ட துறையால் நிலையான நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது அவ்வாறாக மற்றும் உண்மையில் சம்பந்தப்பட்ட நபருக்கு நியாயம் நடந்திருக்கிறது என்றும் நீதிமன்றம் அல்லது ஆயம் முழுதும் திருப்தியடைந்தாலன்றி, அந்த நீதிமன்றம் அல்லது

ஆயம், பணிப் பதிவேட்டில் திருத்தத்திற்கு விருப்பமற்று உத்தரவிடமுடியாது. அவர் பணியில் சேர்ந்து நீண்டகாலம் கழிந்தபின், குறிப்பாக அவரது நியமனம் பணியமர்த்துநரால் நிர்ணயித்த காலத்திற்குப்பின், பதிவு செய்யப்பட்ட பிறந்த தேதியை திருத்த ஒரு அரசுப் பணியாளர் கோரிக்கை வைத்தால், பதிவு செய்யப்பட்ட பிறந்த தேதி தெளிவாகப் பிழையானது என நிரூபிக்க நல்ல சாட்சியம் அவர் வைத்திருந்தாலும்கூட, அவர் பிறந்த தேதி திருத்தத்தை உரிமையான விஷயமாகக் கோரமுடியாது என மீண்டும் மீண்டும், இந்த நீதிமன்றம் கருத்துரைத்தது. தனது உரிமைகளை கோர காலந்தாழ்த்தும் ஒருவருக்கு எந்த நீதிமன்றமோ அல்லது தீர்ப்பாயமோ உதவிக்கு வராது. (காண்க இந்திய ஒன்றியம் –எதிர்– ஹர்னாம் சிங் [(1993) 2 எஸ்சிசி 162 1993 எஸ்சிசி (எல் & எஸ்) 375 (1993) 24 ஏடிசி 92].

12. அது அவ்வாறிருந்தாலும், எங்களது கருத்துப்படி அத்தகைய மனு தாக்கல் செய்யக்கூடிய காலத்தை நிர்ணயித்து எந்த குறிப்பான விதியோ அல்லது ஆணையோ இயற்றப்பட அல்லது செய்யப்படவில்லை என்ற விடயம் எவ்வாறிருந்தபோதும், இருதலைமுறைக்கு மேல் தாமதமாக பிறந்த தேதி திருத்தத்திற்கு மனுச்செய்தது, எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கில் விதியாக

அமைந்துள்ளது. அத்தகைய நிலையிலுங்கூட, அத்தகைய மனு தாக்கல் செய்வதானது நியாயமானதாகக் கருதப்படலாம் என்பது பழக்கம். பணியில் சேர்ந்து 25 ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனு எந்த தரத்திலும் நியாயமானதாக இருக்கமுடியாது, எவ்வாராயினும் அந்த தாமதத்தை விளக்க சிறு முயற்சிகூட செய்யப்படவில்லை. மனு தாக்கல் செய்யப்படவேண்டிய காலவரம்பு குறித்து ம.பி. நிதிநூல் விதி 84 எதுவும் நிர்ணயிக்கப்படாததால், பணிப்பதிவேட்டில் அவரது பிறந்த தேதியை பதிவு செய்வதில் ஏற்பட்ட எழுத்தர் பிழையை திருத்த மேல்முறையீட்டாளர்களுக்கு திருத்தம் செய்ய கடமை உள்ளது என எதிர்மேல்முறையீட்டாளரின் வாதத்தில் எந்த சாரமும் இல்லை."

10. தாமதமாக செய்யப்பட்ட கோரிக்கையை ஏற்காத, இந்த நீதிமன்றத்தின் கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட் தொழிற்சாலை மேலாளர் எதிர் லக்ஷ்மன் சி.அ.ம. (உ) எண்கள் 2592–2593/2018 இல், 25.4.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட முடிவினை கற்றறிந்த கூடுதல் தலைமைச் சட்ட முகவர் சார்ந்துள்ளார். மேலும், தி/ள். ஈஸ்டர்ன் கோல் பீல்ட்ஸ் லிமிடெட் மற்றும் பலர் –எதிர்– ராம் சிங் யாதவ் மற்றும் பலர் என்ற இந்நீதிமன்றத்தின் உரிமையியல் மேல்முறையீடு எண் 7724 2011 இல் 27.5.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட

தீர்முடிவின் மீது சார்ந்துள்ளார். அதில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு முடிவு செய்தது :

> "1987 ஆம் ஆண்டில், பணிப்பதிவுகள் குறித்து மிகவும் குறிப்பாக பணிப்பதிவுகளில் அவரது பிறந்த தேதி குறித்து எந்த பிரச்சினையும் எழுப்ப வாய்ப்பு அளிக்கப்பட்டபோது, அத்தகைய பிரச்சினை எழுப்பப்படவில்லை என்பதற்கு சான்றேதுமில்லை. அவரது ஓய்வுக்கு ஓராண்டுக்கு முன்னர் மட்டுமே எதிர்மேல்முறையீட்டாளர் எண் 1, பிரச்சினையை எழுப்பி அது தாமதமான பிரச்சினை என சொல்லப்பட்டது, எனவே, அத்தகைய விடையத்தை ஏற்க மறுத்த கற்றறிந்த தனி நீதியரசர் அதுபோல பணி நியமனம் தருவோர் நியாயப்படுத்தப்பட்டுள்ளனர்.
>
> பல ஆண்டுகளுக்கு பிறகு, பணிப் பதிவுகளில் அதுவும்கூட, ஓய்வு பெறுவதற்கு ஓராண்டு முன்னர் மட்டும் விடயம் எழுப்பப்பட்டுள்ளபோது எதிர்மேல்முறையீட்டாளர் 1 இன் பிறந்த தேதியை திருத்த மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிட்டதில் உயர் நீதிமன்ற அமர்வு பெரும் பிழை புரிந்துள்ளது, மேற்குறிப்பிட்டபடி முன்னதாக எந்த பிரச்சினையும் எழுப்பப்படவில்லை."

11. மாறாக, அதே பணியமர்த்துநர் தொடர்பான, பாரத் கோகிங் கோல் லிமிடெட் மற்றும் பலர் –எதிர்– சோட்டா பிராசா உர்னவ் (2014) 12 எஸ்சிசி 510 இல் இந்நீதிமன்றம் வழங்கிய

தீர்முடிவை எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்துள்ளார். அதில், இந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்முடிவான பிறந்த தேதியின் மாற்றத்தை செயல்படுத்தும்படியான உயர் நீதிமன்றம் உத்தரவை இந்நீதிமன்றம் உறுதி செய்தது. அதை நுண்ணாய்வு செய்ததன் பேரில், மேற்படி தீர்முடிவானது இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்குக்கு உதவாது என்று நாங்கள் கருதுகிறோம். இந்தக் காரணத்தை கொண்டு மேற்சொன்ன வழக்கில், பணியாளர்களின் பணிப் பதிவுகளை உறுதி செய்ய, 1987 இல் தேசிய கோல் கூலி ஒப்பந்தம் (iii) நடைமுறைக்குவந்து மற்றும் அவர்களது பணி பதிவுகளின் விபரங்கள் அடங்கிய நியமனப் படிவம் வழங்கி பணிப்பதிவில் உள்ள முரண்களை அடையாளம் கண்டு மற்றும் திருத்திக்கொளள் அனைத்து பணியாளர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது இங்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர் (பணியாளர்) அவரது பிறந்த தேதி, நியமன தேதி, தந்தை பெயர் மற்றும் நிரந்தர முகவரி தொடர்பான பதிவுகளில் முரண்பாடுகளைக் கவனித்து, திருத்தம் கோரி வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டர், பிழைகளைத் திருத்த அவர் கோரியிருந்தாலும் பிற முரண்கள் சரி செய்யப்பட்டது, ஆனால் பிறந்த தேதி மற்றும் நியமன தேதி ஆகியவை இருப்பினும் மாற்றப்படாமல் உள்ளது மற்றும் அந்தக் கருத்தின் காரணமாக அது குறித்து பணியாளர் மீண்டும் பிரச்சினையை எழுப்பினார்

மற்றும் நீதித்துறை நிவாரணம் கோரப்பட்டு அதில் அவருக்கு பயன் நீட்சி செய்யப்பட்டது.

12. மாறாக, தற்போதைய வழக்கில் அவர் பணியில் சேர்ந்த நாளிலும் பன்னர் 1987 லும்கூட நியமனப் படிவத்தைப் பூர்த்தி செய்ய எதிர்மேல்முறையீட்டாளர் வாய்ப்பு பெற்றிருந்தும், அவரது பிறந்த நாளை 4.3.1950 என்றே காட்டியுள்ளார் மற்றும் 1998 இல் சேம நல நிதி நியமனப் படிவம் பூர்த்தி செய்யப்பட்ட பொதும், அதனையே அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். அவர் பணியில் சேர்ந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகுதான், முதன் முதலில் 2009 இல் அவர் மனு அளித்துள்ளார். மேலும் ஓய்வுக்கு முன்பாகவே, உடனடியாக நீதிமன்ற நிவாரணம் பெறவில்லை. மாறாக, எதிர்மேல்முறையீட்டாளர் 31.3.2010 இல் ஓய்வு பெற்றுவிட்டார் மற்றும் அதன் பின்னரும்கூட, 2014 இல் தான் ஓய்வுக்குப்பின் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மட்டுமே நீ.பே. மனு தாக்கல் செய்துள்ளார். இந்த சூழ்நிலைகளில், உயர் நீதிமன்றத்தால் எதிர்மேல்முறையீட்டாளருக்கு காட்டப்பட்ட சலுகை நியாயப்படுத்தப்படவில்லை.

13. எனவே, நீ.பே.ம (வழக்கு) எண் 6172/2014 இல் 13.10.2017 தேதியன்று தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் அமர்வில் எல்பிஏ எண் 115/2018 இல் 19.2.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் நிலைநிறுத்தத்தக்கதல்ல.

14. முடிவில் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் செலவு தொகையின்றி மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஏதாவது மனுக்கள் நிலுவையிலிருந்தால், அவை முடிவு செய்யப்படுகின்றன.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."